(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

SUBJECT CODE 22 UTM 511

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2024**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**ஐந்தாம் பருவம்** **நேரம் : 3 மணி**

## பகுதி – 3

## தமிழ்மொழி வரலாறு

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** (K1)

1. ஒரு மொழியில் காணப்படும் பொருளைக் காட்டும் சின்னஞ்சிறு கூறு எது?
   அ) உருபன் ஆ) ஒலியன் இ) தொடை ஈ) எதிர்நிலை
2. பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம் எது?
   அ) காப்பியங்கள் ஆ)வாய்மொழி இலக்கியங்கள் இ) தேவாரம் ஈ) திருவாசகம்
3. கம்பராமாயணம் தோன்றிய காலம் எது?
   அ) பல்லவர் ஆ) நாயக்கர் இ) சோழர் ஈ) மராட்டியர்
4. குகைக் கல்வெட்டுக்களின் மொழி எது?
   அ) பிராபி ஆ) கிரந்தம் இ) வட்டெழுத்து ஈ) .தமிழ்
5. சீத நாடு என்று அழைக்கப்பட்ட பகுதி எது?
   அ) நீலகிரி ஆ) ஏற்காடு இ) ஈரோடு ஈ) வேள் நாடு

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. ஒலியை ஆராயும் மூன்று முறைகளைக் குறிப்பிடுக.
7. மூன்றாம் வேற்றுமைக்குரிய உருபுகளை எழுதுக.
8. மத்தியக் கிளைமொழி என்பது எது?
9. மாற்றிலக்கணத்தின் மூன்று பகுதிகளைக் குறிப்பிடுக.
10. கிரந்த எழுத்து என்றால் என்ன?

### பகுதி – ஆ (5 x 3 = 15 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ. மொழியியலின் மூன்று பெரும் பிரிவுகளைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ மொழிகளின் வரலாற்றை அறியப் பயன்படும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

**(த.தி.பா.)**

12. அ. பதிலிடு பெயர்கள் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ. இயக்கு வினை குறித்து எழுதுக.

13. அ. எண்ணடை குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ. துணை வினை குறித்து ஆராய்க.

14. அ. கொங்கு நாட்டுத் தமிழின் பன்மை விகுதிகளைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ. கன்னியாகுமரிப் பேச்சு வழக்கு குறித்து எழுதுக.

15. அ. இழிபொருட்பேறு குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ. இடைவிடாத அண்மை உருப்புக்களைக் குறிப்பிடுக.

## பகுதி – இ (5 x 5 = 25 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** **(K4 & K5)**

16. அ. மொழி வரலாற்றுச் சான்றுகளில் இலக்கியங்களின் இடம் குறித்து ஆராய்க.

**(அல்லது)**

ஆ. வெளிநாட்டார் எழுதிய இலக்கணங்கள் குறித்து எழுதுக.

17. அ. பல்லவர் காலத் தமிழ் குறித்து விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ. சோழர் காலத் தமிழ் குறித்து ஆராய்க.

18. அ. இன்றைய பேச்சுத் தமிழில் மொழி மாற்றங்கள் குறித்து விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ. பத்திரிகைத் தமிழ் குறித்து விளக்கி எழுதுக.

19. அ. வடக்குக் கிளைமொழியின் இலக்கணக் கூறுகளை ஆராய்க.

**(அல்லது)**

ஆ. மேற்குக் கிளைமொழியின் இலக்கணக் கூறுகளை ஆராய்க.

20. அ. தமிழில் காணப்படும் சொற்றொடரமைப்பைச் சான்றுகளுடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ. வட்டெழுத்து வடிவம் குறித்து விளக்கி எழுதுக.

*ETHICAL PAPER*

************************